ஊடக அறிவித்தல் இல. 17

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.04.25

## அரசியல் கட்சிகளிடமும் சுயேச்சைக் குழுக்களிடமும் முன்வைக்கப்படும் கோரிக்கை COVID 19 க்கு வழிவிடாதிருப்போம்

2020 மார்ச் மாதம் 17, 18, 19 ஆகிய திகதிகளில் வேட்புமனுக்களைக் கையளிக்க வருகைதரும் சந்தர்ப்பத்தில், அதற்கு சட்டத்தினால் அதிகாரம்பெற்ற நபர்களை மாத்திரம் வேட்புமனு மண்டபத்திற்குள் அனுப்பிவைக்குமாறு அன்றேல் வருகைதருமாறு அரசியல் கட்சிகளின் செயலாளர்களிடமும், அதிகாரம்பெற்ற முகவர்களிடமும், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களிடமும் தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள் விடுக்கின்றது.

வேட்புமனுக்களைக் கையளிப்பதற்கான அதிகாரம்பெற்ற செயலாளர், அதிகாரம்பெற்ற முகவர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர் மற்றும் வேட்புமனுப் பத்திரத்தில் இரண்டாவதாக பெயர் குறிப்பிடப்படும் நபருக்கு வேட்புமனு மண்டபத்திற்குள் வர முடியும் என்பதுடன், உதவியாளர் ஒருவரை மாத்திரம் வேட்புமனு மண்டபத்திற்குள் அழைத்து வர முடியும் என்பதை மேலும் அறியத் தருகின்றேன். எனினும், அவ்வாறு அழைத்துவரக்கூடிய ஆகக்கூடிய எண்ணிக்கையினரை அழைத்துவருவதைத் தவிர்த்து வேட்புமனுக்கள் கையளிக்கும் நபரும் மற்றுமொருவரும் மாத்திரம் வேட்புமனு மண்டபத்திற்குள் வருகை தர முடியுமாயின், மிகவும் மெச்சுவதற்குரியதாகும்.

அதேபோல், தேர்தல் சட்டத்தின் கீழ் ஊர்வலங்கள் செல்வதும், சட்டவிரோதமான கூட்டங்களை நடாத்துவதும் தடைசெய்யப்பட்டிருப்பதாலும், எமது நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள COVID 19 அதாவது 'கொரோனா' தொற்று நோயிலிருந்து தொற்றுத் தடைகாப்புப் பெற வேண்டியிருப்பதனால், வேட்புமனு மண்டபத்தைச் சூழ உங்கள் ஆதரவாளர்களை ஒன்றுதிரட்டுவதையும் வரவழைப்பதையும் ஊர்வலமாகச் செல்வதையும் தவிர்க்குமாறும் வேண்டுகின்றேன்.

இந்த ஒரு சில நாட்களுக்குள் மாத்திரமன்றி சாத்தியப்படுமாயின், குறைந்தபட்சம் இன்னும் 10 நாட்களேனும் செல்லும் வரை பகிரங்க மக்கள் பேரணிகளையும் பொதுமக்களை ஒன்றுகூட்டும் பிரசார நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்வதைத் தவிர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமும், வேட்பாளர்களிடமும், அரசியல் செயற்பாட்டாளர்களிடமும் மிகவும் விநயமாகவும் தயவன்புடனும் வேண்டுகோள் விடுக்கின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர,
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.03.15